வல்லமையால் அரசாளும் கர்த்தரே

Album 18

Songs of God's Mighty Acts – Power Over Creation

Song 1 வல்லமையால் அரசாளும் கர்த்தரே

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

தேவனுக்கு முன்பாக பாடுங்கள் -அவர்
நாமத்தின் மகத்துவத்தை கொண்டாடுங்கள்
பூமியின் மீதெங்கும் பணிந்துக்கொண்டு
கர்த்தரைத் துதித்துப் பாடுங்கள்

KJC DNN

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்
துதிக்குஞ்சத்தத்தை அவருக்கு கேட்கப்பண்ணுங்கள்
தேவனுடைய செய்கைகளைப் பாருங்கள்
அவரையே துதித்துப் போற்றுங்கள்

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

தேவனுக்கு பயந்து நடுங்குங்கள்
அக்கிரமக்காரனுக்கு தேவன் செவிகொடார்
நம் ஆத்துமாவுக்கு கர்த்தர் செய்ததை சொல்லிடுங்கள்
தமது கிருபையை நம்மை விட்டு விலக்காதிருப்பார்

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

நம்முடைய கால்களை நேராக்குகிறார்
நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்
வெள்ளியைப்போல் நம்மை புடமிடுகிறார்
கிருபைத் தரும் தேவனுக்கு ஸ்தோத்திர பலியிடு

KJC-DNN

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

நமது தலையின் மேல் மனுஷரை
ஏறிப்போகப்பண்ணினார்
தீயையும் தண்ணீரையும் கடந்துவரக் செய்தார்
செழிப்பான தேசத்திற்கு நம்மைக் கொண்டு வந்தார்
நம் பொருத்தனைகளைக் செலுத்தி அவரைத்
துதித்துப்பாடுவோம்

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் நடக்கச் செய்தீர்

KJC-DNN

O Lord Who Reigns in Unyielding Might